FMM SRI LANKA
நிதஹஸ் மாத்ய வ்யாபாரய
சுதந்திர ஊடக இயக்கம்
Free Media Movement

# මාධ්‍ය නිදහස: නිරීක්ෂණ වාර්තාව
# ஊடக சுதந்திரம்: கண்காணிப்பு அறிக்கை
# Media Freedom Rights Monitoring Report

MFRMD

2022 ஏப்ரல்

Vol. 02 - தொகுதி 04










ஊடக சுதந்திரம் குறித்து ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற சம்பவங்கள் மற்றும் முந்தைய சம்பவங்களின் பின்தொடர்வுகள் தொடர்பில் சுருக்கமான முறையில் கண்காணித்து இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்களின் கருத்துச் சுதந்திரம் மற்றும் பேச்சுச் சுதந்திரம் தொடர்பான நிகழ்வுகள் மற்றும் புதிய சட்ட உருவாக்கம், சட்டச் சீர்திருத்தங்கள் மற்றும் அது தொடர்பான முன்மொழிவுகளுக்கான தேசிய மற்றும் சர்வதேச கருத்துகள் போன்றவற்றிலும் இந்த அறிக்கை கவனம் செலுத்துகிறது. ஊடக சுதந்திரம் மற்றும் ஊடக உரிமைகள் தொடர்பில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகச் சுதந்திர ஊடக இயக்கம் தேர்ந்தெடுத்துள்ள பகுதிகூறுகள் மற்றும் நோக்கங்களுக்கு அமைய 26 நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் ஏப்ரல் 2022 அறிக்கையில் உள்வாங்கபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவற்றில் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் தொடர்பான 9 சம்பவங்கள், சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் தொடர்பான 9 சம்பவங்கள் ,ஊடக சுயாதீனத்துவம் தொடர்பான 01 சம்பவம் மற்றும் கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் தொடர்பான 07 சம்பவம் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

## ஏப்ரல் மாதத்தில் அறிக்கையிடப்பட்ட சம்பவங்கள்:

1. மிரிஹான போராட்டத்தின்போது பேருந்துக்கு தீ வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பான தகவல்களை அறிக்கையிடச் சென்ற தரிந்து ஜயவர்தன உள்ளிட்ட ஊடகவியலாளர்கள் குழுவை ஜனாதிபதி ஊடக அதிகாரியென அறிமுகப்படுத்திய நபர் ஒருவர் அச்சுறுத்தல் விடுத்தமை.
2. குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தால் சமூக ஊடக செயற்பாட்டாளர் அனுருத்த பண்டார கைது செய்யப்பட்டமை.
3. மிரிஹானவில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டமைக்காக லேக்ஹவுஸ் சமூக ஊடகப் பிரிவின் தலைவர் மஞ்சுள சமரசேகர சேவையில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டமை.
4. சிரச தொலைக்காட்சி அலைவரிசையின் அறிக்கையிடல் மிரிஹான ஆர்ப்பாட்டத்திற்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திற்கு பொலிஸ் மா அதிபர் உத்தரவிட்டமை.
5. ஜனாதிபதி அவசரகால நிலையைப் பிரகடனம் செய்ததுடன் 5 நாட்களுக்குப் பின்னர் அதனை நீக்கிக்கொண்டமை.

6. பாதுகாப்பு அமைச்சின் அறிவிப்பின் பேரில் சமூக ஊடகங்களை அணுகுவதைத் தடுக்க இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்தமை.

7. மிரிஹானவில் ஊடகவியலாளர்கள் மற்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் வெகுசன ஊடக அமைச்சருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியதுடன், இலங்கை இளம் ஊடகவியலாளர்கள் சங்கம் பொலிஸ் மா அதிபரிற்கு முறைப்பாடு ஒன்றை மேற்கொண்டமை.

8. அவசரகால நிலை பிரகடனம், ஊரடங்கு உத்தரவு மற்றும் சமூக ஊடக முற்றுகைக்கு எதிராக நான்கு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை.

9. போராட்டக்காரர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு புகார் அளிக்கப்பட்டமை.

10. மிரிஹான சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்ட 6 பேருக்குப் பிணை வழங்கப்பட்டமை.

11. இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை மற்றும் பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்திற்கான உரிமை தொடர்பாக மனித உரிமைகள் அமைப்புகளுக்குக் கடிதம் அனுப்பியமை.

12. காலிமுகத்திடல் போராட்டக் களத்தில் ஊடக மையம் ஒன்றை நிறுவுதல்.

13. போராட்டக்காரர்களின் எதிர்ப்பு காரணமாகக் காலிமுகத்திடல் போராட்டக் களத்தில் நிறுவப்பட்ட "டயலொக்" குறிகை இயக்கக் கோபுரம்(செல்போன் டவர்) அகற்றப்பட்டமை.

14. காலி நகரத்தில் ஆரம்பிக்கப்பட்ட "கோடாகோஹோம்" போராட்டக் களத்தின் கூடாரம் காவல்துறையினரின் தலையீட்டில் உடைத்து அகற்றப்பட்டமை.

15. காலிமுகத்திடல் போராட்டத்திற்கு ஆதரவாகக் கருத்து தெரிவித்த காவல்துறை அதிகாரி கைது செய்யப்பட்டமை.

16. ரம்புக்கனையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளனர்.

17. ஏப்ரல் 19 ஆம் திகதி அன்று 'அமைதியான மக்கள் போராட்டத்துக்குச் சட்டப் பாதுகாப்பு' கோரி நீதிச் சேவை ஆணைக்குழுச் செயலகத்திடம் மனுவொன்றை அளித்தமை.

18. காலிமுகத்திடல் மக்கள் போராட்டத்திற்கு ஊடக அமைப்புக்களின் கூட்டமைப்பு தமது ஆதரவை அளித்தமை.

19. அனைத்து பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின் போராட்டத்திற்கு விதிக்கப்பட்ட தடை உத்தரவை நீதிமன்றம் நிராகரித்தமை.

20. மக்கள் போராட்டத்திற்கு ஆதரவாக எழுத்தாளர்கள், பதிப்பாளர்கள் மற்றும் அச்சக உரிமையாளர்கள் ஆர்ப்பாட்ட பேரணியொன்றை ஏற்பாடு செய்தமை.

21. போராட்டத்தில் ஈடுபட்டுள்ள குழுவினரின் எதிர்ப்பு காரணமாகக் காலிமுகத்திடல் போராட்ட மைதானத்தில் நடைபெறவிருந்த "ஜனதா வேதிகா (மக்கள் அரங்கம்)", இசை நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டமை.

22. காலிமுகத்திடல் போராட்டக்களத்தில் அமைக்கப்பட்டிருந்த கொல்லப்பட்ட, காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் சித்திரவதை செய்யப்பட்ட பத்திரிக்கையாளர்களைச் சித்தரிக்கும் பதாகைள் சேதப்படுத்தப்பட்டமை.

23. அலரிமாளிகைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை வெளியேற்றுமாறு பொலிஸார் விடுத்த கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்தமை.

24. அலரிமாளிகைக்கு முன்பாகப் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போராட்டக்காரர்களைப் பொலிஸ் பாரவூர்தியை மோதி விபத்தை ஏற்படுத்த முயற்சித்தமை தொடர்பில் காவல்துறையில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளமை.

25. 17 வருடங்களுக்கு முன்னர் படுகொலை செய்யப்பட்டு இதுவரை நீதி கிடைக்காத ஊடகவியலாளர் தர்மரட்ணம் சிவராமின் நினைவேந்தல் நிகழ்வு.

26. காவல்துறை அதிகாரிகளின் தாக்குதல் காரணமாக அலரிமாளிகை முன் போராட்டத்தில் ஈடுபட்ட ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டமை.

**அட்டவணை எண்: 01 அறிக்கையிடப்பட்ட மொத்த சம்பவங்களின் எண்ணிக்கை – 2022 ஏப்ரல் மாதம்**

| உள்ளடக்கப்பட்டுள்ள ஆக்கக் கூறுகள் | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 09 |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள் | 09 |
| ஊடக சுயாதீனத்துவம் | 01 |
| கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் | 07 |
| **மொத்தம்** | **26** |

## ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம்

**ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் எனப்படுவது ஊடகவியலாளர்கள் தங்களது தொழிலை உடல்சார் மற்றும் மனரீதியாக ஒர்முகப்படுத்தி சுயாதீனமாகத் தமது ஊடக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சுதந்திர மற்றும் சுயாதீன சூழல் ஆகும். இது ஊடக சுதந்திரத்தின் அடிப்படை காரணியாகவும் காணப்படுகின்றது. அதே சமயம், ஊடகச் சுதந்திரம், கருத்துச்**

**சுதந்திரம் ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டுமாயின், குடிமக்கள் ஊடகங்களில் அல்லது வேறு வழிகளில் எதிர்விளைவுகளை எதிர்கொள்ளாமல் அல்லது தனது பாதுகாப்பிற்கு எவ்வித பாதிப்புக்களையும் எதிர்கொள்ளாமல் சுதந்திரமாகத் தனது கருத்தை வெளிப்படுத்தும் சூழல் உருவாக வேண்டும். கருத்துச் சுதந்திரம் என்பது அமைதியான முறையில் ஒன்றுகூடல், அமைதியான முறையில் போராட்டம் மேற்கொள்ளல் மற்றும் எதிர்ப்பு தெரிவித்தல் போன்ற உரிமைகளை உள்ளடக்கியதாகும். இவ்வடிப்படை உரிமைகள் மீறப்பட்ட 9 சம்பவங்கள் ஏப்ரல் மாதத்தில் அறிக்கையிடப்பட்டன.**

**காலிமுகத்திடல் போராட்டக்களத்தில் தகவல் குறிகை இயக்கக் கோபுரம் (செல்போன் டவர்) ஒன்றை நிறுவுவது தொடர்பான சர்ச்சையின் உண்மைநிலை எதுவாயிருந்தாலும், ஊடகவியலாளர்கள் மற்றும் போராட்டக்காரர்கள் அது தொடர்பில் தெரிவித்த எதிர்ப்பு, "பாதுகாப்பு மற்றும் சுதந்திரம் தொடர்பில் ஊடகவியலாளர்களின் அக உணர்வு" என்ற குறிகாட்டியின் உள்ளடங்கும் என்பதனால் இந்த ஆக்கக் கூறின் கீழ் இது நோக்கப்படுகின்றது.**

**அட்டவணை 2: 2022 ஏப்ரல் மாதம் : ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் – சம்பவங்கள் 09**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| தாக்குதல் | 02 |
| உளவியல் ரீதியான துஷ்பிரயோகம் | 06 |
| பாதுகாப்பு மற்றும் சுதந்திரம் தொடர்பில் ஊடகவியலாளர்களின் அக உணர்வு | 01 |
| **மொத்தம்** | **09** |

1. **மிரிஹான போராட்டத்தின்போது பேருந்துக்கு தீ வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பான தகவல்களை அறிக்கையிடச் சென்ற தரிந்து ஜயவர்தன உள்ளிட்ட ஊடகவியலாளர்கள் குழுவை ஜனாதிபதி ஊடக அதிகாரியென அறிமுகப்படுத்திய நபர் ஒருவர் அச்சுறுத்தல் விடுத்தமை.**

   ஏப்ரல் முதலாம் திகதி காலைச் சம்பவ இடத்திற்கு சென்ற ஊடகவியலாளர்களை நுவன் தாரக என்ற நபர் தடுத்துள்ளதுடன், தமக்கு அச்சுறுத்தல் மற்றும் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தியதாகத் தரிந்து ஜயவர்தன மிரிஹான பொலிஸில் முறைப்பாடு மேற்கொண்டுள்ளார். (புகார் எண். CIB II 283/300)

   ஆதாரம்: www.facebook.com

2. **சிரச தொலைக்காட்சி அலைவரிசையின் அறிக்கையிடல் மிரிஹான ஆர்ப்பாட்டத்திற்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திற்கு பொலிஸ் மா அதிபர் உத்தரவிட்டமை.**

   பொலிஸ்மா அதிபரின் எண். IGP/PA/CID/OUT/76/22 மற்றும் ஏப்ரல் 1 தேதியிட்ட கடிதத்தில் இந்த உத்தரவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. "பொதுமக்களை வேண்டுமென்றே தூண்டிவிட்டு, பொது அமைதியை சீர்குலைக்கும் வகையில் செயல்படத் தூண்டும் நோக்கத்துடன் அல்லது அரசுக்கு எதிராகத் பொதுமக்களை தூண்டும் வகையில் இந்த ஆர்ப்பாட்டம் தொடர்பில் நேரலை ஒளிபரப்பு வழங்கியதாகவும் அல்லது அப்படி நடக்கும் எனத் தெரிந்திருந்தும் ஊடக பிரசாரம் மேற்கொள்வதற்கு தொடர்ந்தும் நடவடிக்கை மேற்கொண்டதாகக் கண்காணிக்கப்பட்டுள்ளது" என்பதாக அந்த உத்தரவு கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

   ஆதாரம்: www.facebook.com

3. **போராட்டக்காரர்களின் எதிர்ப்பு காரணமாகக் காலிமுகத்திடல் போராட்டக் களத்தில் நிறுவப்பட்ட "டயலொக்" குறிகை இயக்கக் கோபுரம்(செல்போன் டவர்) அகற்றப்பட்டமை.**

   போராட்டக்களத்தில் இணைய அணுகல் மற்றும் சாதாரண கையடக்கத் தொலைபேசி இணைப்புகள் ஆரம்பத்தில் இருந்தே மோசமான நிலையில் காணப்பட்டதுடன், சிறந்த சேவையை வழங்கும் வகையில் இந்தத் தகவல் குறிகை இயக்கக் கோபுரம்(செல்போன் டவர்) நிறுவப்படும் எனக் குறித்த நிறுவனம் அறிவித்தது. போராட்டக்காரர்கள்குறித்த தகவல்களைப் பாதுகாப்புப் படையினருக்குத் தெரிவிப்பதற்கான ஒரு தந்திர மூலோபாயமாக இது இருக்கும் என எதிர்ப்பாளர்கள் தெரிவித்தனர். போராட்டக்காரர்களின் எதிர்ப்பின் காரணமாக ஏப்ரல் 16-ம் திகதி அமைக்கப்பட்ட குறிகை இயக்கக் கோபுரம் (செல்போன் டவர்) அகற்றப்பட்டது.

   ஆதாரம்: 1. www.mawratanews.lk 2. gagana.lk

4. **காலி நகரத்தில் ஆரம்பிக்கப்பட்ட "கோடாகோஹோம்" போராட்டக் களத்தின் கூடாரம் காவல்துறையினரின் தலையீட்டில் உடைத்து அகற்றப்பட்டமை.**

   ஆதாரம்: 1. sinhala.lankanewsweb.net

5. **ரம்புக்கனையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளனர்.**

   42 வயதான சமிந்த லக்ஷான் கடந்த ஏப்ரல் 19ஆம் திகதி ரம்புக்கனையில் எரிபொருள் கோரி நடைபெற்ற ஆர்ப்பாட்ட பேரணியின்போது சுட்டுக் கொல்லப்பட்டார். இது தொடர்பாகத் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் அரசாங்கத்திற்கு எதிராகப் பலத்த எதிர்ப்புகள் எழுந்ததுடன் பல போராட்டங்களும் நடத்தப்பட்டன. இது கொலை என்று கூறிய நீதிமன்றம், துப்பாக்கிச்சூட்டில் தொடர்புடைய மற்றும் அது தொடர்பாக உத்தரவிட்ட அதிகாரிகளைக் கைது செய்யுமாறு உத்தரவிட்டது.

   ஆதாரம்: 1. www.facebook.com 2. www.aithiya.lk

6. **போராட்டத்தில் ஈடுபட்டுள்ள குழுவினரின் எதிர்ப்பு காரணமாகக் காலிமுகத்திடல் போராட்ட மைதானத்தில் நடைபெறவிருந்த “ஜனதா வேதிகா (மக்கள் அரங்கம்)“, இசை நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டமை.**

ஏப்ரல் 24 ஆம் திகதி பிற்பகலில் இந்த இசை நிகழ்ச்சி திட்டமிடப்பட்டிருந்ததுடன் பல கலைஞர்கள் மற்றும் இசைக்குழுக்கள் கலந்து கொள்ள இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். போராட்டத்தில் பல்வேறு தரப்பினரிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் மற்றும் ஒரு குழுவினரின் நேரடியான எதிர்ப்பு காரணமாக இசை நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டது. பின்னர் இராஜகிரிய மேம்பாலத்திற்கு அருகில் இந்த இசை நிகழ்ச்சி உள்ளடங்கிய நிகழ்வு இடம்பெற்றது.

ஆதாரம்: 1. www.facebook.com 2. www.youtube.com

7. **காலிமுகத்திடல் போராட்டக்களத்தில் அமைக்கப்பட்டிருந்த கொல்லப்பட்ட, காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் சித்திரவதை செய்யப்பட்ட பத்திரிக்கையாளர்களைச் சித்தரிக்கும் பதாகைள் சேதப்படுத்தப்பட்டமை.**

ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக அமைக்கப்பட்ட இந்தப் பதாகைகள் ஏப்ரல் 28 ஆம் திகதி இரவு அகற்றப்பட்டு அந்த அலுவலக வளாகத்திற்குள்ளேயே வீசியெறியப்பட்டுள்ளதுடன் மேற்கண்ட நடவடிக்கையைப் பாதுகாப்பு படையினர் மேற்கொண்டதாக ஊடகவியலாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர். கடந்த ஏப்ரல் 29ஆம் திகதி சர்வதேச ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடக அமைப்புகளின் பிரதிநிதிகள் இந்தச் செயலுக்குக் கடும் கண்டனம் தெரிவித்ததுடன் குறித்த பதாகைகள் மீண்டும் நிறுவப்படும் எனத் தெரிவித்தனர்.

ஆதாரம்: www.facebook.com

8. **அலரிமாளிகைக்கு முன்பாகப் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போராட்டக்காரர்களைப் பொலிஸ் பாரவூர்தியை மோதி விபத்தை ஏற்படுத்த முயற்சித்தமை தொடர்பில் காவல்துறையில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளமை.**

போராட்டக்காரர்கள் அலரிமாளிகை முன் காணப்படும் நடைபாதையில் நிற்கமுடியாத படி பேருந்துகள், பாரவூர்திகளை நிறுத்தி வைப்பதற்கு காவல்துறையினர் நடவடிக்கை எடுத்ததுடன் ஏப்ரல் 26 ஆம் திகதி சிவில் உடையில் இருந்த நபரொருவர் அங்குக் காணப்பட்ட பாரவூர்தியொன்றை பின்னுக்கு செலுத்தியதில் இந்த விபத்தை ஏற்படுத்த முயற்சித்தமை குறிப்பிடத்தக்கது. இந்தச் சம்பவம் தொடர்பாகப் பாதிக்கப்பட்ட நபர்களின் பாரிய அழுத்தத்திற்கு மத்தியில் அந்தச் சம்பவம் தொடர்பில் புகார் பதிவு செய்யக் காவல்துறையினர் ஒப்புக்கொண்டுள்ளனர். (புகார் எண். CIB 333/116) நடைபாதை இடையூறு விளைவிக்கும் வகையில் வாகனங்களை நிறுத்திவைத்தலுக்கு எதிராக வழக்கறிஞர்கள் குழுவொன்று இதற்கு முன்னர் காவல்துறையினருக்கு புகார் அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆதாரம்: 1. www.youtube.com 2. lankasara.com

9. **காவல்துறை அதிகாரிகளின் தாக்குதல் காரணமாக அலரிமாளிகை முன் போராட்டத்தில் ஈடுபட்ட ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டமை.**

கடந்த ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி மேற்கண்ட தாக்குதல் இடம்பெற்றுள்ளதாகவும், அந்தத் தாக்குதலுக்கு உள்ளானவர் ருமேஸ் என்ற இளைஞர் என்பதாகவும், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள அவரின் நிலைமை பாரதூரமானது அல்ல என்பதுடன் எதிர்காலத்தில் இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சட்டத்தரணி பிரபோத ரத்நாயக குறிப்பிட்டார்.

ஆதாரம்: FMM Media Rights Monitoring Desk

## சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள்

**ஏப்ரல் மாதத்தில், ஊடக சுதந்திரம் தொடர்பான சட்டவித் முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள் என்ற ஆக்கக் கூறுக்குள் உள்ளடங்கும் ஒன்பது சம்பவங்கள் அவதானிக்கப்பட்டன. ஏறக்குறைய இந்தச் சம்பவங்கள் அனைத்தும் ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் பதவி விலகல் கோரி ஏற்பட்டுள்ள போராட்டங்களுடன் தொடர்புடையவை. இங்குக் குறிப்பிட்டுச் சொல்லாவிட்டாலும், போராட்டங்களுக்கு எதிராகக் காவல்துறையினரால் தடை உத்தரவு கோரிய சந்தர்ப்பங்கள் மற்றும் அவசரகால சட்டம் மற்றும் சமூக ஊடகங்கள்மீதான தடை போன்ற விடயங்கள் தொடர்பில் நீதிமன்ற செயல்பாடு ”நீதிமன்ற பாரபட்சமற்ற தன்மை அல்லது சுயாதீனத்துவம்” என்ற குறிக்காட்டிக்குள் நேரடியாகப் பிரதிபலிக்கின்றது. “பத்திரிகையாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்குத் தண்டனையின்மை“ என்பது “சட்டவித் முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள்“ என்ற ஆக்கக் கூறுகளின் கீழ் உள்ளடக்கப்படுவதால் ஊடகவியலாளர் சிவராமின் நினைவேந்தல், இங்குச் சேர்க்கப்பட்டுள்ளது.**

**அட்டவணை 03 – 2022 ஏப்ரல் : சட்ட விதிமுறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள் – 09 சம்பவங்கள்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| சட்ட நடவடிக்கை மேற்கொள்ளல் | 08 |
| ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு தண்டனை விலக்கு | 01 |
| **மொத்தம்** | **09** |

1. **குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தால் சமூக ஊடக செயற்பாட்டாளர் அனுருத்த பண்டார கைது செய்யப்பட்டமை.**

ஏப்ரல் 1ஆம் திகதி இரவு முகத்துவாரம் காவல்துறை அதிகாரிகள் என்று அறிமுகப்படுத்திக்கொண்ட சிலர் அவரைக் கூட்டிச்சென்றுள்ளதுடன், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலையீட்டில் அவர்பற்றிய தகவல்கள் தெரியக்கிடைத்தது. ஏப்ரல் 2ஆம் திகதி இரவு புதுக்கடை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். மேலும் அவர் தரப்பில் நூற்றுக்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் ஆஜராகியமை குறிப்பிடத்தக்கது. அனுருத்த பண்டார GoHomeGota2022 குயஉநடிழழம குழுவின் நிர்வாகி என்பதுடன் தண்டனை சட்டக்கோவை 120 சரத்தின் இன் கீழ் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அனுருத்த பண்டார, தம்மைக் கைதுசெய்து தனது அடிப்படை உரிமைகளை மீறியமைக்காக 100 மில்லியன் ரூபா நட்டஈடு கோரி உச்ச நீதிமன்றத்தில் ஏப்ரல் 29ஆம் திகதி அடிப்படை உரிமை மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

ஆதாரம்: 1. https://www.dailymirror.lk
2. https://fb.watch
3. https://www.newsfirst.lk

2. **ஜனாதிபதி அவசரகால நிலையைப் பிரகடனம் செய்ததுடன் 5 நாட்களுக்குப் பின்னர் அதனை நீக்கிக்கொண்டமை.**

பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 2வது பிரிவினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்படும் என அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த முடிவுக்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கடும் எதிர்ப்பு தெரிவித்ததுடன், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதற்கு போதிய காரணமின்றி அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்துவது மக்களின் மனித உரிமைகளை மீறும் செயலாகும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானித்தது. அதனைத் தொடர்ந்து கடந்த 5ஆம் திகதி நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டது.

ஆதாரம்: https://www.bbc.com

3. **பாதுகாப்பு அமைச்சின் அறிவிப்பின் பேரில் சமூக ஊடகங்களை அணுகுவதைத் தடுக்க இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்தமை.**

ஏப்ரல் 2ஆம் திகதி நள்ளிரவு முதல் அமலுக்கு வந்த இந்தத் தடைக்கு ஐக்கிய நாடுகள் சபை, அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்தன. சமூக ஊடகங்களை அடிப்படையாகக் கொண்ட ஊடக நிறுவனங்கள் மற்றும் இலங்கை இளம் ஊடகவியலாளர்கள் சங்கம் என்பன இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இது தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளன. பாதுகாப்பு அமைச்சின் அறிவிப்பை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு சமூக ஊடகங்களை உடனடியாக முடக்குவதற்கு இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்கு எவ்வித உரிமையும் இல்லை என்பதுடன், இந்த நடவடிக்கை மனித உரிமை மீறல் என்றும் ஏப்ரல் 3ஆம் திகதி கூடிய மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்தது. அதனைதொடர்ந்து அன்று மாலை 3.30 மணி முதல் சமூக ஊடக முடக்கம் நீக்கப்பட்டது.

ஆதாரம்: 1. https://www.bbc.com
2. https://www.newsfirst.lk

4. **அவசரகால நிலை பிரகடனம், ஊரடங்கு உத்தரவு மற்றும் சமூக ஊடக முற்றுகைக்கு எதிராக நான்கு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை.**

மேற்கண்ட நடவடிக்கைகளுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட நான்கு அடிப்படை உரிமை மனுக்கள்மீதான விசாரணையை அனுமதிக்க உச்ச நீதிமன்றம் ஏப்ரல் 7ஆம் திகதி முடிவு செய்தது.

ஊடகவியலாளர்களான ரசிக ஜயக்கொடி, ரோயல் ரேமண்ட், மனித உரிமை செயற்பாட்டாளர் ஷஷி வின்சென்ட் மற்றும் மொரட்டுவை மாநகர சபை உறுப்பினர் லிஹினி பெர்னாண்டோ ஆகியோரினால் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

ஆதாரம்: http://www.dinamina.lk

5. **மிரிஹான சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்ட 6 பேருக்குப் பிணை வழங்கப்பட்டமை.**

கடந்த மார்ச் 31ஆம் திகதி மிரிஹான ஆர்ப்பாட்டத்தின்போது கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஆறு சந்தேக நபர்களும் ஏப்ரல் 6ஆம் திகதி இடம்பெற்ற அடையாள அணிவகுப்பில் அடையாளம் காண முடியாமல் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 27 பேரும் ஏப்ரல் 1ஆம் திகதி கங்கொடவில நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், ஆறு பேரைத் தவிர மற்ற அனைவரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

ஆதாரம்: https://www.newscutter.lk

6. **காலிமுகத்திடல் போராட்டத்திற்கு ஆதரவாகக் கருத்து தெரிவித்த காவல்துறை அதிகாரி கைது செய்யப்பட்டமை.**

காவல்துறை உத்தியோகபூர்வ சீருடையில் காலிமுகத்திடல் போராட்டகளத்தில் மக்கள் போராட்டத்திற்கு ஆதரவை அளித்துப் பகிரங்கமாகக் கருத்து தெரிவித்த டபிள்யூ.எம். அமரதாச என்ற பொலிஸ் சார்ஜன்ட் கடந்த ஏப்ரல் 14ஆம் திகதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இவர் கடந்த 15ஆம் திகதி கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார். அவர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ரீஜென்சி அர்சகுலரத்ன உட்பட சிரேஷ்ட சட்டத்தரணிகள் பலர் கலந்துகொண்டனர்.

ஆதாரம்: 1. https://www.facebook.com
2. http://www.aruna.lk

7. **அனைத்து பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின் போராட்டத்திற்கு விதிக்கப்பட்ட தடை உத்தரவை நீதிமன்றம் நிராகரித்தமை.**

1979 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை சட்டத்தின் 106 (01) பிரிவின் பிரகாரம் 16 மாணவர் தலைவர்களைப் பிரதிவாதிகளாகப் பெயரிட்டு கொழும்பு கோட்டை பொலிஸார் நீதிமன்றில் இந்தக் கோரிக்கையை முன்வைத்திருந்தனர். எதிர்காலத்தில் போராட்டம் நடத்துவதைத் தடுக்க தன்னால் உத்தரவு பிறப்பிக்க முடியாது எனத் தெரிவித்த கொழும்பு மேலதிக நீதவான், ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏதேனும் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டால் பொலிஸ் அதிகாரத்தைப் பயன்படுத்துமாறு காவல்துறைக்கு பணிப்புரை விடுத்தார்.

ஆதாரம்: https://www.mawratanews.lk

8. **அலரிமாளிகைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை வெளியேற்றுமாறு பொலிஸார் விடுத்த கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்தமை.**

கொள்ளுப்பிட்டி அலரிமாளிகைக்கு முன்பாகப் பொதுமக்களுக்குத் தொந்தரவு அளிக்கும் வகையில் பல நபர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதால் அவர்களை அவ்விடத்திலிருந்து அகற்றுவதற்கு போராட்டக்காரர்களுக்கு எதிராக நீதிமன்ற உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு கொள்ளுபிடிய காவல்துறை கோரியபோதிலும் கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுனவல கடந்த 25 ஆம் திகதி குறித்த கோரிக்கையை நிராகரித்தார்.

ஆதாரம்: https://www.truenews.lk

9. 17 வருடங்களுக்கு முன்னர் படுகொலை செய்யப்பட்டு இதுவரை நீதி கிடைக்காத ஊடகவியலாளர் தர்மரட்ணம் சிவராமின் நினைவேந்தல் நிகழ்வு.

2005 ஆம் ஆண்டு ஏப்ரல் 29 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டதுடன் இன்னும் நீதி வழங்கப்படாமையை எதிர்த்துச் சிவராமின் நினைவேந்தல் நிகழ்வானது ஏப்ரல் 29 ஆம் திகதி முல்லைத்தீவு, மட்டக்களப்பு மற்றும் கொழும்பு காலிமுகத்திடல் மைதானத்தில் என மூன்று இடங்களில் அனுஷ்டிக்கப்பட்டது.

ஆதாரம்: 1. https://twitter.com 2. https://twitter.com 3. https://twitter.com

## ஊடக சுயாதீனத்துவம்

**ஊடக சுயாதீனத்துவ ஆக்ககூறின் கீழ், ஊடக நிறுவனத்தில் பணிபுரியும் பத்திரிகையாளர்களின் சுயாதீனத்துவம், வெளிநாட்டு ஊடகங்களின் பணிபுரியும் செய்தி ஆசிரியர் குழுவின் சுயாதீனத்துவம், அரசியல்வாதிகள், வணிக சக்திகள் மற்றும் மதச் செல்வாக்கிலிருந்து ஊடக சுயாதீனத்துவம், விளம்பர அனுசரணை வழங்குதல் அல்லது வழங்காமல் இருத்தல் போன்ற செயற்பாடுகளின் காரணமாக உள்ளடக்கத்தின் செல்வாக்கு செலுத்தல் போன்ற குறிகாட்டிகள் உள்ளடங்கும். அதன்படி, ஊடக நிறுவனத்திற்குள் ஊடகவியலாளர்களின் சுயாதீனத்துவம் என்ற குறிகாட்டிக்குள் உள்ளடங்கும் ஒரு சம்பவம் ஏப்ரல் மாதத்தில் அவதானிக்கப்பட்டது.**

**அட்டவணை 04 – 2022 ஏப்ரல் : ஊடக சுயாதீனத்துவம்– 01 சம்பவங்கள்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| ஊடக நிறுவனத்தில் ஊடகவியலாளர்களின் சுயாதீனத்துவம் | 01 |
| **மொத்தம்** | **01** |

1. **மிரிஹானவில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டமைக்காக லேக்ஹவுஸ் சமூக ஊடகப் பிரிவின் தலைவர் மஞ்சுள சமரசேகர சேவையில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டமை.**

மார்ச் 31 ஆம் திகதி அன்று, அவர் போராட்டத்தில் பங்கேற்றது ஊடகங்களில் விளம்பரப்படுத்தப்பட்டதுடன் ஏப்ரல் 1 திகதி அன்று, அவர் இடைநீக்கம் செய்யப்படுவதாக நிர்வாகம் அறிவித்தது. கடமைகளை முடித்துவிட்டு பணியிலிருந்து திரும்பும் வேளையில் தான் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டதாகவும் அது தனது அடிப்படை உரிமை எனவும் மஞ்சுள சமரசேகர தெரிவித்துள்ளார்.

ஆதாரம்:

1. FMM Media Rights Monitoring Desk
2. https://www.youtube.com

## கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள்

**'கட்டமைப்புரீதியான விதிமுறைகள்" ஊடக சுதந்திரத்தின் மற்றொரு முக்கிய அங்கமாகும். ஊடக தொகுதியின் முழு கட்டமைப்பிற்கும் மற்றும் ஊடக சுதந்திரம் இயக்கப்படும் ஒட்டுமொத்த சூழலுக்கும் பொருந்தக்கூடிய 06 சாத்தியமான குறிகாட்டிகளை உள்ளடக்கியுள்ளது. அவற்றில் "கண்காணிப்புக் குழுக்களின் ஊடக சுதந்திரத்திற்கான செயல்திறன்சார் ஆதரவு" என்ற குறிகாட்டியின் கீழ் 6 சம்பவங்கள் மற்றும் "சுயாதீன மற்றும் வினைத்திறனான ஊடக உற்பத்தி மற்றும் விநியோக வசதிகள்" என்ற குறிகாட்டியுடன் தொடர்புடைய ஒரு சம்பவம் ஏப்ரல் மாதத்தில் அவதானிக்கப்பட்டது.**

## அட்டவணை 04–2022 ஏப்ரல் கட்டமைப்புரீதியான விதிமுறைகள் –07 சம்பவங்கள்

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| கண்காணிப்பு குழுக்களின் ஊடக சுதந்திரத்திற்கான ஆதரவு | 06 |
| சுயாதீன மற்றும் வினைத்திறனான ஊடக உற்பத்தி மற்றும் விநியோக வசதிகள் | 01 |
| **மொத்தம்** | **07** |

1. **மிரிஹானவில் ஊடகவியலாளர்கள் மற்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் வெகுசன ஊடக அமைச்சருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியதுடன், இலங்கை இளம் ஊடகவியலாளர்கள் சங்கம் பொலிஸ் மா அதிபரிற்கு முறைப்பாடு ஒன்றை மேற்கொண்டமை**

அவ்விரண்டு கடிதங்களும் பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்திரம் மீறப்பட்டதை மற்றும் தாக்கப்பட்டமையை கண்டித்துள்ளதுடன் அது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளது. இந்த முறைப்பாட்டிற்கு அமைய, மிரிஹான காவல்துறை நிலையத்திற்குள் இருந்த சந்தேக நபர்கள் தாக்கப்பட்டமை மற்றும் அதனைத் தடுக்காமை தொடர்பில் அன்றிரவு மிரிஹான பொலிஸ் நிலையத்தில் இருந்த காவல்துறை அதிகாரிகள் மற்றும் அதனை மேற்பார்வை செய்த அதிகாரிகள்மீது விசாரணை நடத்துமாறு நுகேகொட பிரதேச பொலிஸ் அத்தியட்சகருக்கு பொலிஸ் மா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளார்.

ஆதாரம்: https://satahan.blog

2. **போராட்டக்காரர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு புகார் அளிக்கப்பட்டமை.**

ஜனாதிபதியை பதவி விலகுமாறு கோரி காலி முகத்திடல் மைதானத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், அவர்களின் நலன் தொடர்பில் அரசாங்கத்திற்கு தேவையான பரிந்துரைகளை வழங்கவும்

இலங்கை இளம் ஊடகவியலாளர் சங்கம் (SLYJA) ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்துள்ளது. கனேமுல்ல இராணுவ முகாமில் போராட்டத்தை நாசப்படுத்த ஒரு குழுவிற்கு பயிற்சி அளிக்கப்படுவதாகச் சமூக ஊடகங்களில் பரப்பப்பட்ட காணொளி தொடர்பிலும் குறித்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுகுறித்து விசாரணை நடத்த ஆணைக்குழு கடந்த ஏப்ரல் 16 ஆம் திகதி இராணுவ முகாமிற்கு விஜயம் செய்தது. இருப்பினும் இந்தக் குற்றச்சாட்டை இராணுவம் மறுத்துள்ளது.

ஆதாரம்: 1. https://satahan.blog
2. https://sinhala.srilankabrief.org

3. **இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை மற்றும் பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்திற்கான உரிமை தொடர்பாக மனித உரிமைகள் அமைப்புகளுக்குக் கடிதம் அனுப்பியமை.**

இலங்கைப் பிரஜைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதில் தலையிடுமாறு ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கத் தூதரகம், இந்திய உயர்ஸ்தானிகராலயம் மற்றும் மனித உரிமை அமைப்புக்களுக்கு இலங்கை இளம் ஊடகவியலாளர்கள் சங்கம் ஏப்ரல் 17ஆம் திகதி இந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளது.

மிரிஹான போராட்டத்தின் பின்னர் இரண்டு வாரங்களாக வளர்ச்சிகண்ட மக்கள் போராட்டங்களுக்கு எதிராக அராசங்கம் பின்பற்றிய அடக்குமுறையை இக்கடிதம் விவரிக்கிறது.

ஆதாரம்: https://satahan.blog

4. **காலிமுகத்திடல் போராட்டக் களத்தில் ஊடக மையம் ஒன்றை நிறுவுதல்.**

கடந்த ஏப்ரல் 16ஆம் திகதி காலிமுகத்திடலில் உள்ள "கோட்டகோகம" போராட்ட மைதானத்தில் "சர்வதேச ஊடக மையம்" ஸ்தாபிக்கப்பட்டது, போராட்டத்தில் தீவிரமாகப் பங்காற்றி வரும் ஊடகவியலாளர்களின் அர்பணிப்பில் இது ஆரம்பிக்கப்பட்டது. போராட்டக்களத்தில் பத்திரிகையாளர்களின் பணியை எளிதாக்குவதே இதன் நோக்கமாகும்.

ஆதாரம்: https://www.facebook.com

5. **ஏப்ரல் 19 ஆம் திகதி அன்று 'அமைதியான மக்கள் போராட்டத்துக்குச் சட்டப் பாதுகாப்பு' கோரி நீதிச் சேவை ஆணைக்குழுச் செயலகத்திடம் மனுவொன்றை அளித்தமை.**

இந்த மனு சட்டத்தரணிகள் குழுவினால் தயாரிக்கப்பட்டு, ஏராளமான சட்டத்தரணிகளின் கையொப்பங்களுடன் கடந்த ஏப்ரல் 19ஆம் திகதி நீதிச்சேவை ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டது.

ஆதாரம்: FMM Media Rights Monitoring Desk

6. **காலிமுகத்திடல் மக்கள் போராட்டத்திற்கு ஊடக அமைப்புக்களின் கூட்டமைப்பு தமது ஆதரவை அளித்தமை.**

"மக்கள் போராட்டத்திற்கான ஊடகவியலாளர்களின் ஆதரவு" எனும் தொனிப்பொருளில் கடந்த ஏப்ரல் 20ஆம் திகதி கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து காலிமுகத்திடல் போராட்டக்களம் வரை பேரணியாகச் சென்றதுடன், போராட்ட மைதானத்தில் நிறுவப்பட்டுள்ள சர்வதேச ஊடக மையத்தில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றையும் நடத்தியது. மேலும் ஊடகங்களுக்கு எதிரான குற்றங்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் இங்குக் கலந்துரையாடப்பட்டது.

ஆதாரம்: FMM Media Rights Monitoring Desk

7. **மக்கள் போராட்டத்திற்கு ஆதரவாக எழுத்தாளர்கள், பதிப்பாளர்கள் மற்றும் அச்சக உரிமையாளர்கள் ஆர்ப்பாட்ட பேரணியொன்றை**

ஏற்பாடு செய்தமை.

ஏப்ரல் 24ஆம் திகதி மாலை கொள்ளுப்பிட்டி சந்தியிலிருந்து காலி வீதியில் ஊடாகக் காலி முகத்திடல் போராட்டக்களம் வரை பேரணியாகச் சென்ற ஊர்வலத்தில் மேற்படி துறைகளைச் சேர்ந்த பெருந்திரளான மக்கள் இணைந்து கொண்டனர். காகிதத் தட்டுப்பாடு மற்றும் அனைத்து மூலப்பொருள்களினதும் விலை உயர்வு காரணமாகக் கருத்துச் சுதந்திரத்திற்கு ஏற்பட்டுள்ள சவால்கள்குறித்து இங்கு முக்கியமாக வலியுறுத்தப்பட்டது.

ஆதாரம்: FMM Media Rights Monitoring Desk

**அட்டவணை 5: ஊடக சுதந்திரம்: 2022 ஜனவரி முதல் பெப்ரவரி வரை சுதந்திர ஊடக இயக்கத்தால் அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை**

| உள்ளடக்கப்பட்டுள்ள குறிகாட்டிகள் | 2022 ஜனவரி | | 2022 பெப்ரவரி |
|---|---|---|---|
| | புதிய சம்பவங்கள் | முன்னைய சம்பவங்களின் வளர்ச்சிப்போக்கு | |
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 7 | | 09 |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் | 4 | 05 | 09 |
| ஊடக சுயாதீனத்துவம் | 2 | | 01 |
| தொழில்சார் நிபுணத்துவம் | 2 | | - |
| கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் | 0 | 01 | 07 |
| **மொத்தம்** | **15** | | **26** |

2022 ஊடக சுதந்திர உரிமைகள் கண்காணிப்பு அறிக்கை ஜனவரி வரை இங்கு பார்வையிடவும்

**பின்னுரை:** சிவில் சமூக குறிக்கோள்கள், தேசிய மற்றும் சர்வதேச வழக்கு தீர்ப்புகள் மற்றும் அனைத்துலக பிரகடனங்களுக்கு ஏற்ப, ஊடக சுதந்திரம் என்பது மனித உரிமை என சுதந்திர ஊடக இயக்கம் உடன்படுவதுடன்.அனைத்து மனிதர்களுக்கும் காணப்படவேண்டிய சிந்தனை சுதந்திரம், மனசாட்சி சுதந்திரம், மதச்சுதந்திரம் மற்றும் மற்றவர்களின் கருத்துக்களை தெரிந்து கொள்வதற்கான அடிப்படை உரிமைகளை தடையேதும் இன்றி அனுபவிப்பதற்கான சுதந்திரமே மனித உரிமையாகும். இந்த அடிப்படையில் ஊடக சுதந்திரம் என்பது பின்வரும் பத்து பகுதிகளை உள்ளடக்கிய தொகுப்பு என சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

(1) சிந்தனை சுதந்திரம் (2) கருத்து தரிப்பதற்கான சுதந்திரம் (3) கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் (4) அமைதியான முறையில் மேற்கொள்ளப்படும் ஒன்றுகூடல் உரிமை மற்றும் கருத்து தெரிவிக்கும் சுதந்திரம் (5) தகவல் அறியும் உரிமை (6) கேட்டல் மற்றும் பார்த்தல் வழி சார்ந்த பதிவு செய்தல் மற்றும் அறிக்கை வைத்துக்கொள்வதற்கான சுதந்திரம் (7) பதிப்புச்சுதந்திரம் (8) செய்திப்பத்திரிகை சுதந்திரம் (9) இலத்திரனியல் ஊடக சுதந்திரம் (10) இணைய சுதந்திரம். என்பனவையே இதன் பகுதிகூறுகள் ஆகும்.

இந்த ஒவ்வொரு பகுதிகளும் ஒன்றோடொன்று தொடர்பு உடையதாக காணப்படுவதனால் ஒரு பகுதிகூறுக்கு ஏற்படும் வரையறைகள் மற்றும் தாக்கங்கள் ஊடக சுதந்திரம் தொடர்பில் காணப்படும் அனைத்து பகுதிக்கூறுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை சுதந்திர ஊடக இயக்கம் ஏற்றுக்கொள்கின்றது. எனவே பொறுப்பற்று மற்றும் வெறுப்புணர்வுடன் மேலே குறிப்பிட்ட சுதந்திரங்களை அத்துமீறி அனுபவிப்பதானது சிறந்ததொரு முறையல்ல என்பதனை சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

இந்த மாதாந்த அறிக்கை தயாரிக்கபடுவது பொது ஊடகத்தில் பிரசுரிக்கப்படும் மற்றும் சுதந்திர ஊடக இயக்கத்திற்கு கிடைக்கப்பெறும் தவல்களுக்கு அமைய மேலதிக தகவல்களை தேடி அறிந்து அந்த நிகழ்வுகளை ஆய்வுக்குட்படுத்திய பின்னரேயாகும்.இந்த ஆய்வின் போது சுதந்திர ஊடக இயக்கம் மேலே குறிப்பிட்ட பத்து ஊடக சுதந்திர சட்டெண் பகுதிகளை உள்ளடக்கிய சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏழு தொகுப்புகளின் ஊடாக தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை அளவுகோல்களை கொண்டே கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொள்கின்றது.


Free Media Movement

Convener: Lasantha De Silva +94 71 166 7938, +94 77 810 7620 | Secretary: Hana Ibrahim +94 77 741 2995
Treasurer: Ananda Jayasekara +94 77 312 4850
No 96, Bernard Soysa Mw, Colombo 05. Tel: +94 112368895 Fax: +94 112368895;
Web: www.fmmsrilanka.lk, www.mediareform.lk
Email: fmmsrilanka@gmail.com|Facebook: https://www.facebook.com/fmm.srilanka
Twitter: https://twitter.com/FMMsrilanka|#FMM25